# ஆடலிறை
# மழலைப் பாடல்கள்



75/2

# ஆடலிறை

# மழலைப் பாடல்கள்

முத்தமிழ் வெளியீட்டகம், யாழ்ப்பாணம்.

2008.

| | |
|---|---|
| நூல் : | ஆடலிறை மழலைப் பாடல்கள் |
| நூலாசிரியர்: | ஆடலிறை |
| வெளியீடு: | முத்தமிழ் வெளியீட்டகம்,<br>314, செம்மணி வீதி,<br>நாயன்மார்கட்டு, யாழ்ப்பாணம். |
| வெளியீட்டுரிமை: | நூலாசிரியர்க்கு |
| முதற் பதிப்பு | யூன் 2006 |
| இரண்டாம் பதிப்பு | ஜனவரி 2008 |
| பக்கங்கள் | IV + 28 |
| ஓவியங்கள்: | ஓவியர் ரமணி |
| அச்சுப் பதிப்பு: | பாரதி பதிப்பகம்,<br>430, காங்கேசந்துறை வீதி, யாழ்ப்பாணம். |
| விலை : | ரூபா 75.00 |

| | |
|---|---|
| Title : | *Adalirai Nursery Rhymes* |
| Author: | *Adalirai* |
| Published by : | *Muththamizh Veliyeedakam,*<br>*314, Chemmany Road,*<br>*Nayanmarkaddu, Jaffna.* |
| Copy Right: | *Author* |
| First Edition | *June 2006* |
| Second Edition | *January 2008* |
| Pages: | IV + 28 |
| Art | *Oviyar Ramani* |
| Printer: | *Bharathi Pathippakam,*<br>*430, K.K.S. Road, Jaffna.* |
| Price: | *Rs. 75.00* |

# முன்னுரை

குழந்தை பிறந்ததும் தாயும் பாட்டியும் தாலாட்டுப் பாட்டுப் பாடிக் குழந்தையைத் தூங்கச் செய்கிறார்கள். தொடர்ந்து உறவினர் குழந்தையோடு பேசி, குழந்தையின் உள்ளத்தில் மொழி யாற்றலை வளர்க்கிறார்கள். இதன் மூலம் குழந்தை பேசத் தொடங்குகின்றது. அதன் அறிவு வளர்கின்றது. ஒரு வயது முதல் ஐந்து வரையிலுள்ள பருவம் மழலைப் பருவம் எனப்படுகின்றது. இக்காலத்தில் மிக எளிமையான பாடல்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுக்கப்படுகின்றன. மூன்று வயது முதல் ஐந்து வயது வரையான மழலைப் பருவத்தினருக்கான எளிமையான, சிறிய பாடல்கள் மழலைப் பாடல்கள் எனப்படுகின்றன. இப்பாடல்களைத் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொடுப்பதன் மூலம் குழந்தையின் இசையாற்றலும் சொல்லாற்றலும் வளர்கின்றன. இல்லத்திலேயே இக்கல்விநிலை வளர்வதால் குழந்தை பாடசாலைக்குச் செல்லும்போது குழந்தையின் கல்வி நிலை சிறப்பாக வளரும் வாய்ப்பு உண்டாகும். எனவே, மழலைக் காலத்திலேயே மழலைப் பாடல்களைப் பெற்று இல்லத்தி லுள்ளவர்கள் பாடல்களைச் சொல்லிக்கொடுத்துப் பாடமாக்கிப் பாடச்செய்யப் பயிற்சி அளித்தால் பாடசாலைக்குச் சென்று, எழுத்தும் சொல்லும் படிக்கும்போது குழந்தையே மழலைப் பாடல்களைத் தானே வாசித்துப் படித்துத் தனது அறிவை மேலும் வளர்க்க முயலும். குடும்பத்தினர் இப்பணியை ஆற்ற முயல்வது சிறப்பாக அமையும். இப்பாடல்கள் மொழியாற்றலை மட்டுமன்றி எழுத்து, எண், வாசிப்பு, கணித ஆற்றல்களையும் சிந்தனை ஆற்றலையும் வளர்க்கும்.

தமிழில் சங்ககாலம் முதலே குழந்தைப் பாடல்கள் வழக்கில் இருந்ததாகவும் ஔவையார் முதலியோரின் பாடல்கள் குழந்தை வளர்ச்சி நோக்கைக் கொண்ட இலக்கியங்கள் என்ற கருத்தும் உள்ளது. இருபதாம் நூற்றாண்டு முதலே தமிழில் குழந்தைப் பாடல் இலக்கியங்கள் சிறப்பாகத் தோன்றின என்ற கருத்தும் இலக்கிய வரலாற்று அறிஞர் பலரிடம் உள்ளது. இதன் சிறப்பு நிலைக்கு ஆங்கில மழலைப் பாடல்களும் (Nursery Rhymes) துணை செய்தன என்ற கருத்தும் உள்ளது. இம்மழலைப் பாடல்களே இன்று குழந்தைகளின் தமிழ் அறிவுக்கும் இசை அறிவுக்கும் தமிழ் வளர்ச்சிக்கும் சிறப்பாக அமைகின்றன.

மழலைப் பருவக் குழந்தைகளுக்கான இந்த **மழலைப் பாடல்கள்** என்ற நூலில் இருபத்திரண்டு பாடல்கள் உள்ளன. இவற்றுள் பதினாறு பாடல்கள் மூலத்தமிழ்ப் பாடல்கள். ஆறு பாடல்கள் தமிழாக்கம் செய்யப்பட்ட ஆங்கிலப் பாடல்கள். இப்பாடல்கள் குழந்தை தனது கருத்தைக் கூறுவது போலும் சிலருடன் உரையாடுவது போலவும் அமைகின்றன. இதில் எழுத்துப் பாடல்களும் எண் பாடல்களும் மழலைப் பருவத்தினர்க்குத் துணை செய்யக்கூடியவை.

இம்மழலைப் பாடல்களுக்கான அழகிய கருத்துணர்வுப் படங்களையும் அட்டைப் படத்தையும் வரைந்து வழங்கிய ஓவியர் 'ரமணி ' அவர்களுக்கு எனது உளம் நிறைந்த நன்றிகள்.

இப்பாடல் நூலைப் பாரதி பதிப்பகத்தினர் சிறப்பாக அச்சிட்டு வழங்கியுள்ளனர். பாரதி பதிப்பகத்தினர்க்கும் சிறப்பாக, அதன் உரிமையாளர் திரு. இ. சங்கர் அவர்களுக்கும் எனது உள மார்ந்த நன்றிகள்.


இந்நூல் பாடல்களைப் பாடும் மழலைகளுக்கும் படிக்கும் குழந்தைகளுக்கும் வாசகர்களுக்கும் எனது மனம் நிறைந்த நன்றிகள்.

**314, செம்மணி வீதி,**
**நாயன்மார்கட்டு,**
**யாழ்ப்பாணம்.**
**29.01.2008**

ஆடலிறை
(மயிலங்கூடலூர் பி. நடராசன்)

# மழலைப் பாடல்கள்


| | | |
|---|---|---|
| 01. | வெள்ளிப் பூ | 01 |
| 02. | மழையே பெய்யாதே | 02 |
| 03. | ஆடே வா | 03 |
| 04. | பூசுக் குட்டி | 04 |
| 05. | காகமும் குயிலும் | 05 |
| 06. | ஒன்று, இரண்டு.... | 06 |
| 07. | கூட்டல் | 07 |
| 08. | பிய்ந்த நிலா | 08 |
| 09. | நிலவே நீ வாழி | 09 |
| 10. | வெள்ளி | 10 |
| 11. | பூக்கள் | 11 |
| 12. | நிறங்கள் | 12 |
| 13. | பச்சைக்கிளி | 13 |
| 14. | கிளி | 14 |
| 15. | நாய்க்குட்டி | 15 |
| 16. | அறிந்திடு | 16 |
| 17. | இயற்கை வகுத்த வழி | 17 |
| 18. | காகிதக் கப்பல் | 19 |
| 19. | நல்ல வாத்தியார் | 21 |
| 20. | அனா ஆவன்னா | 22 |
| 21. | அகர வரிசை | 24 |
| 22. | மெய்யெழுத்துப் பாட்டு | 26 |



# வெள்ளிப் பூ


மின்னி மின்னி ஒளிவீசும்
சின்னச் சின்ன வெள்ளிப்பூ

ஏனோ மேலே நீசென்றாய்?

வானில் வைரம் போலுன்னைப்
பதித்தார் யாரோ நீசொல்வாய்.

— மூலம் : Twinkle, Twinkle, Little Star





# மழையே பெய்யாதே

மழையே மழையே பெய்யாதே
மீண்டும் ஒருநாள் வருவாயே

சின்ன மோகன் விளையாடத்
தோழ ரோடு போகின்றான்

மழையே இன்று பெய்யாதே
மீண்டும் ஒருநாள் வருவாயே.

– மூலம்: Rain Rain Go Away



# ஆடே வா

செம்மறி ஆடே வாவாவா
கம்பளி மயிர்கள் உண்டோசொல்

ஆம்ஆம் மூன்று மூடைதான்

அதனில் ஒன்று தலைவர்க்கு
மற்ற ஒன்று தலைவிக்கு

*வீதி அருகே வாழ்கின்ற
சிறுவ னுக்கும் ஒன்றாகும்.

– மூலம்: Baa Baa Black Sheep

---

* சில நூல்களில் பின்வருமாறு உள்ளது :

வீதி அருகே அழுகின்ற
சிறுவ னுக்குத் தரமாட்டேன்



# பூசுக் குட்டி


"பூசுக் குட்டி பூசுக் குட்டி
எங்கே போய்நீ திரும்பி வந்தாய்?"


"ஆசை யோடு லண்டன் சென்று
ராணி யைநான் பார்த்து வந்தேன்"

"பூசுக் குட்டி அங்கே சென்றாய்
என்ன செய்தாய்? சொல்லு கேட்போம்"


"ராணி அம்மா கதிரை யின்கீழ்
இருந்த எலியை விரட்டி வந்தேன்."

– மூலம்: Pussy Cat, Pussy Cat.





# காகமும் குயிலும்




காகம் கறுப்பு நிறத்தது
குயிலும் கறுப்பு நிறத்தது

மாற்றம் காண்ப தெப்படி?
தெரிந்தால் சொல்வாய் தம்பிநீ

தென்றல் காற்று வந்ததும்
காகம் "காகா" என்னுமே

குயிலோ இனிய குரலிலே
"கூகூ" என்று கூவுமே.

— மூலம்: Kakkaka Krishnaka ...,
Sanskrit Infant Reader.





# ஒன்று இரண்டு....

ஒன்று இரண்டு மூன்று
எனது செருப்பைப் பூட்டு


மூன்று நான்கு ஐந்து
கதவின் மேலே தட்டு


ஐந்து ஆறு ஏழு
தடிகள் எல்லாம் பொறுக்கு

ஏழு எட்டு ஒன்பது
அவற்றை ஒழுங்காய் அடுக்கு

ஒன்பது பத்துப் பத்து
கொழுத்த பேட்டுக் கோழி.

– மூலம்: One, Two Buckle My Shoe.





# கூட்டல்

ஒன்றும் ஒன்றும் இரண்டு
ஒன்று சேர்ந்து பாடு

இரண்டு மிரண்டும் நான்கு
இறைவன் பாதம் நாடு


மூன்றும் மூன்றும் ஆறு
மூடர் தம்மைச் சாடு

நான்கும் நான்கும் எட்டு
நாளும் அறிவைத் தேடு

ஐந்தும் ஐந்தும் பத்து
அஞ்சி வாழ்தல் கேடு.

— ஈழநாடு, மாணவர் மலர். 23.01.1962






# பிய்ந்த நிலா

அம்மா அம்மா வாஅம்மா
வான நிலவைப் பாரம்மா
வட்டத் தோசை போலிருந்த
வண்ண நிலவைப் பாரம்மா
பிய்ந்து கிடத்தல் பாரம்மா
பிய்த்தே எடுத்த தேனம்மா
எட்ட நிற்கும் சந்திரனை
எட்டிப் பிடித்த தாரம்மா.



# நிலவே நீ வாழி



எங்கள் பாட்டி ஔவையுடன்
எளிய முயலுக் கிடந்தந்தே
எங்கும் புகழை நாட்டிவிட்டாய்
இனிய நிலவே நீவாழி

உளத்திற் களங்கம் கொண்டேநீ
உயர நின்றும் பயனென்ன?
களங்கம் ஒழிய வழியொன்று
கண்டு சொல்வேன் நீவாராய்

வெள்ளித் தோழர் புடைசூழ
வேண்டும் ஒளியைத் தருகின்றாய்
கள்ளத் தனமாய்ச் சிலவேளை
காணா தெங்கோ மறைகின்றாய்

உன்னை இன்று வரைநாங்கள்
உவந்தே வாவா என்றழைத்தோம்
வென்றே மேலே மிகவிரைவில்
விருந்தாய் வருவோம் உனைத்தேடி.

— ஈழநாடு, சிறுவர் பூங்கா. **25.11.1962**



# வெள்ளி

மின்னி மின்னி ஒளிவீசும்
மேகச் சுடராம் தாரகையே
சின்ன வெள்ளி ஆனாலும்
சிறப்பாய் மேலே ஏன்சென்றாய்?

காலை வேளை சூரியனும்
கதிரை வீசி எழும்போது
மேலே வைரம் போல்நின்ற
உன்னைக் காணா தேங்கிடுவேன்

செண்டில் மலரைப் போலுன்னைச்
சிதைத்து விடுவோம் என்றெண்ணி
விண்ணில் ஏறி நின்றாயோ?
விளக்கிச் சொன்னாற் குறையுண்டோ?

விடியும் வேளை வருகின்ற
வெள்ளி உமது தலைமகனோ?
கொடிய இருளை வீழ்த்திடவே
கூடும் இறுதி ஆயுதமோ?

— ஈழநாடு, சிறுவர் பூங்கா. 16.02.1963



# பூக்கள்

வண்ண வண்ணப் பூக்கள்
மனதைக் கவரும் பூக்கள்
வண்டு வந்து குந்தி
மது அருந்தும் பூக்கள்

கண்ணைப் பறிக்கும் பூக்கள்
காலை மலரும் பூக்கள்
மண்ணில் தோன்றும் செடிகள்
வழங்கும் நல்ல பூக்கள்


ஈசன் பாதம் பணிய
ஏற்ற நல்ல பூக்கள்
ஆசை யோடு நாங்கள்
அணிய நல்ல பூக்கள்

காலை தோறும் மலர்ந்து
களிப்பை ஊட்டும் பூக்கள்
மாலை கட்டிச் சூட
வாய்த்த நல்ல பூக்கள்.

— தினகரன், மாணவர் கழகம். 21.04.1963



# நிறங்கள்



மரத்தில் எங்கும் இலைகள்
எங்கும் பச்சை நிறமாம்

உரோசா மரத்தில் பூக்கள்
உள்ளம் கவரும் சிவப்பு

மா மரத்தில் மாங்காய்
மஞ்சள் அதனின் நிறமாம்

பாலோ தேன்போல் இனிக்கும்
பாலின் நிறமோ வெள்ளை

மேலே எங்கும் வானம்
நீல நிறமாய்த் தோன்றும்

காகம் கத்தும் “காகா”
காகம் நிறமோ கறுப்பு

பச்சை சிவப்பு மஞ்சள்
வெள்ளை நீலம் கறுப்பு

என்று நிறங்கள் பலவாம்
கண்டால் மனமும் மகிழும்.

# பச்சைக் கிளி

பச்சைக் கிளிதான் பறந்து வந்து
பாட்டுப் பாடுது


இச்சைக் கினிய கதைகள் கூறி
இதயம் கவருது

அச்ச மின்றித் தோளில் அமர்ந்து
மழலை கூறுது

மிச்ச மின்றிக் கோவைப் பழங்கள்
தின்று தீர்க்கிது

உச்சிக் கொப்பில் பறந்தே ஏறித்
தூங்கிக் கிடக்கிது.





# கிளி



பச்சைக் கிளியே வாவாவா
பழகிப் பேசப் பறந்தேவா
கொச்சை மழலை உன்போலே
கூற வல்லார் யாரிங்கே?

பேசக் கற்றோர் நாமென்று
பெருமை பேசும் மக்களுக்கு
"ஈசன் எனக்கும் அக்கொடையை
ஈந்தான்" என்றே சொல்லிடவா

"தம்பி தம்பி" என்றென்னைத்
தமிழில் அழைத்தால் நானுனக்குச்
செம்பு போன்ற கனிக்கொய்யா
தேடித் தருவேன் அன்புடனே

இன்ப மாகப் பேசிடலாம்
இனிய பழங்கள் தின்றிடலாம்
துன்பு றுத்தும் மழைவெய்யில்
துறந்து கூட்டில் வாழ்ந்திடலாம்

வான வில்லைப் போன்றநிறம்
வாய்ந்த இறக்கை யார்தந்தார்?
நானும் அதுபோல் வாங்கிடவே
நயந்து நீயும் கூறிடுவாய்.

— ஈழநாடு, சிறுவர் பூங்கா. 11.02.1962

# நாய்க் குட்டி

வெள்ளை நிறத்து நாய்க்குட்டி
வீட்டுக் கேற்ற நாய்க்குட்டி
கள்ள மில்லா நாய்க்குட்டி
காவல் காக்கும் நாய்க்குட்டி

துள்ளித் துள்ளி ஓடுகின்றார்
தூரஞ் சென்று மீள்கின்றார்
தள்ளிப் பந்தை அடிக்கின்றார்
தாயைக் கண்டால் ஓடுகின்றார்

நன்றி யுள்ள நாய்க்குட்டி
நான் வளர்க்கும் நாய்க்குட்டி
என்னைக் கண்டால் தன்வாலை
ஆட்டு கின்ற நாய்க்குட்டி

மீனோ டிறைச்சி தின்றிடுமாம்
விரும்பிச் சோறும் உண்டிடுமாம்
ஏனோ செல்வா நாய்க்குட்டி
இன்னும் வாங்க வில்லைநீ?

— ஈழநாடு, சிறுவர் பூங்கா. 12.05.1963




# அறிந்திடு

காகா என்று கரையுது
காகம் அதுதான் அறிந்திடு
கூகூ என்றே கூவிடும்
குயிலை நீயும் கேட்டிடு


கொக்க ரக்கோ என்றிடும்
கோழிச் சேவல் பார்த்திடு
பக்கம் வந்தே அகவிடும்
பறவை மயிலென் றுணர்ந்திடு

காகம் இனத்தோ டுண்டிடும்
களித்து மயிலும் ஆடிடும்
இராகம் குயிலே பாடிடும்
இருந்து நீயும் மகிழ்ந்துபார்.

— திருமகன். 15.03.1962



# இயற்கை வகுத்த வழி



தம்பீ தம்பீ இங்கேவா
தாவும் மானின் அழகைப்பார்
தும்பி இனங்கள் அதுகண்டே
துன்பம் மறந்தே ஆடல்பார்


கோல மயிலின் இனம்கூவும்
குயிலின் இசைக்கே நடமாடும்
ஞாலம் எல்லாம் மகிழ்ந்துருக
ஞான கீதம் குயில்பாடும்

தூய நீர்கொள் வாவியிலே
துலங்கும் கமல மலர்மீது
நேயங் கொண்ட தவளையது
நேர்ந்து சென்றே தானுறங்கும்




தேரை பாடும் இசைகேட்டுத்
தேம்பும் கன்று தானுறங்கும்
பாலை ஊட்டும் பசுவங்கே
பசிய புல்லை மகிழ்ந்துண்ணும்.

— ஈழநாடு, மாணவர் மலர். **02.12.1961**



# காகிதக் கப்பல்



பெரிய மழையும் பெய்தது
பெருகி வெள்ளம் பாய்ந்தது
அரிய மழலைக் குழந்தைகள்
அதனைக் கலக்கி மகிழ்ந்தனர்

கலையில் வல்ல குழந்தையோ
காகி தத்தில் கப்பலை
நிலையு ணர்ந்து செய்தது
நீரில் ஓட விட்டது

கப்பல் நீரில் வேகமாய்
ஆடி அசைந்து சென்றது
கப்பல் ஓடும் அழகினைக்
கண்டு சிறுவர் மகிழ்ந்தனர்

கப்பல் நீரில் நனைந்ததால்
கணத்தில் மூழ்கிப் போனது
“கப்பல் மூழ்கிப் போச்சடா”
கத்திச் சிறுவர் துள்ளினர்.

– மூலம்: பண்டிதர் க. இராசையாவின்
கட்டுரைக் கதை, தமிழ்மொழிப் பயிற்சி



# நல்ல வாத்தியார்

வீட்டில் எமக்குக் கதைகள் கூறி
விளங்க வைத்தாள் பாட்டி
கூட்டி எம்மை நல்ல பாட்டுக்
கூறி வந்தாள் பாட்டி

பள்ளிக் கூடம் சென்ற போது
பண்பு கொண்ட ஒருவர்
துள்ளிக் குதித்துக் கையைக் காட்டிச்
சொல்லித் தந்தார் பாட்டு

நல்ல கதைகள் படங்க ளோடு
நமக்குச் சொல்லித் தந்தார்
நல்ல வாத்தி யாரெ மக்கு
நாளும் தந்தை போல்வார்

எழுதத் தெரியா எமக்கு நன்றாய்
எழுத்துஞ் சொல்லித் தந்தார்
அழுதா லெம்மை அழைத்த ணைத்தே
அன்பு காட்டி நிற்பார்

சின்னத் தம்பி நீயும் வாடா
செல்வம் நீயும் வாடி
என்றும் மகிழ்ச்சி யாயி ருக்க
எங்கள் பள்ளி செல்வோம்.

— ஈழநாடு, சிறுவர் பூங்கா. 30.06.1963

# அனா ஆவன்னா




அனா ஆவன்னா பாடிடுவோம்
அப்பு ஆச்சியை வணங்கிடுவோம்

இனா ஈயன்னா பாடிடுவோம்
இலையும் ஈயும் பார்த்திடுவோம்

உனா ஊவன்னா பாடிடுவோம்
உறியும் ஊசியும் பார்த்திடுவோம்

எனா ஏயன்னா பாடிடுவோம்
எலியும் ஏணியும் கற்றிடுவோம்



ஐயன் னாவைப் பாடிடுவோம்
ஐயர் ஐந்து படித்திடுவோம்

ஒனா ஓவன்னா ஓதிடுவோம்
ஒட்டகம் ஓலை எழுதிடுவோம்


ஔவன் னாநாம் படித்திடுவோம்
ஔவை பாட்டுப் பாடிடுவோம்

அஃகே னம்நாம் அறிந்திடுவோம்
எஃகுக் கத்தி தீட்டிடுவோம்.


# அகர வரிசை




**அ**ணிலே **அ**ணிலே வாஓடி
**அ**சைந்து **அ**சைந்தே வாஓடி



**ஆ**ட்டுக் குட்டி வாஓடி
**ஆ**லம் இலைநான் தந்திடுவேன்




**இ**லையும் பூவும் ஆய்ந்திடுவோம்
**இ**ரண்டு மாலை கட்டிடுவோம்




**ஈ**யே எங்கே போகின்றாய்?
**ஈ**யே இனிய தேன்தாரும்




**உ**லையில் அரிசி போட்டேநாம்
**உ**ணவை **உ**ண்ணச் சமைத்திடுவோம்




**ஊ**சி **ஊ**டே நூல்கோத்தே
உடைகள் பலவும் தைத்திடுவோம்



எலியே எலியே போபோபோ
எனது நூலைத் தின்னாதே




ஏணி மரத்தில் சாய்த்திடுவோம்
ஏறி மாங்காய் ஆய்ந்திடுவோம்




ஐயர் திறந்தார் ஆலயத்தை
ஐந்து விளக்கு ஏற்றிவைத்தார்

1 2 3 4 5
6 7 8 9 10

ஒன்று இரண்டு மூன்றுமுதல்
ஒன்பது பத்து எண்ணுவாயே



ஓலை பனையில் வெட்டிடுவோம்
ஓலைப் பெட்டி இழைத்திடுவோம்




ஔவைப் பாட்டி பாடியதாம்
ஆத்தி சூடி பாடிடுவோம்



எஃகில் செய்த கத்தியினை
எடுத்துப் பழத்தை வெட்டிடுவோம்.

# மெய் எழுத்துப் பாட்டு




கொக்கு ஒன்று பறந்தது
குளத்தின் கரையில் இருந்தது

சங்கு ஒன்று சேற்றிலே
அசைந்த சைந்து வந்தது

மச்சம் உண்ண விரும்பியே
மனிதன் ஒருவன் வந்தனன்

குஞ்சு மீனைப் பிடித்தனன்
கூடை யுள்ளே போட்டனன்

வட்ட மான தாமரைப்
பூவை இழுத்துப் பியத்தனன்



வண்டு பூவில் இருந்தது
பயந்து பறந்து போனது

வாத்து நீந்தி வந்தது
வந்த வழியே போனது

நீந்தி வந்த தேரையும்
கண்டு விலகிச் சென்றது

கப்பல் போன்ற தோணியில்
இருவர் தண்டு வலித்தனர்

தும்பி ஒன்று வந்தது
பூவில் இருந்தே ஒலித்தது

வெய்யில் மறைந்து போனதால்
நீரும் குளிராய் இருந்தது


வியர்வை அரும்ப வந்தவன்
விரும்பிக் கரையில் இருந்தனன்

கல்லை எறிந்தான் நீரிலே
வட்ட அலைகள் தெரிந்தன




அவ்வை போன்ற பாட்டியும்
அங்கே வந்து சேர்ந்தனள்

ஆழ்ந்து கிடந்த தாமரைக்
கிழங்கை அகழ்ந்து சென்றனள்



வெள்ளைப் பூக்கள் வாடின
வீழ்ந்து நீரில் அமிழ்ந்தின

காற்று வீசி அடித்தது
புற்கள் சரிந்து நிமிர்ந்தன



பன்றி ஒன்று வந்தது
பாய்ந்து சேற்றில் புரண்டது.